# திருவாமாத்தூர்ப் பதிகச் சதகம்
# ஆறாவது அறுசீர் விருத்தசதகம்

பதிப்பாளர்

**ப. கோமளா**

நெறியாளர்

**வீ.அரசு**

பேராசிரியர்–தலைவர்

**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக்கழகம்**
**சென்னை – 600 005.**
**மே 2006**

# திருவாமாத்தூர்ப் பதிகச் சதகம்
# ஆறாவது அறுசீர் விருத்தசதகம்

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு


பதிப்பு

**ப. கோமளா**

நெறியாளர்

**வீ. அரசு**

பேராசிரியர் – தலைவர்



**தமிழ் இலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக்கழகம்**
**சென்னை - 600 005.**
**மே 2006**

“சுவடியியல் மற்றும் பதிப்பியல்” பட்டயப் பேற்றிற்காகசென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் பதிப்பேடு எண் :43010510

# நெறியாளர் சான்றிதழ்

**முனைவர் வீ. அரசு,**
பேராசிரியர் - தலைவர்
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் நடைபெற்று வரும் **'சுவடியியல் மற்றும் பதிப்பியல்'** நிறைசான்றிதழுக்கான **"திருவாமாத்தூர்ப் பதிகச் சதகம் - ஆறாவது அறுசீர்விருத்த சதகம்"** என்னும் இப்பதிப்பேட்டினைச் செல்வி **ப. கோமளா** அவர்கள் என் மேற்பார்வையில் உருவாக்கியுள்ளார் எனவும் இந்தப் பதிப்பேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

**(பேராசிரியர் வீ. அரசு)**

நாள் :
இடம்: சென்னை -5.

# பதிப்பாளர் உறுதிமொழி

**ப.கோமளா**
முதுகலை இரண்டாம் ஆண்டு,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் நடைபெற்று வரும் **'சுவடியியல் மற்றும் பதிப்பியல்'** நிறைசான்றிதழுக்கான **"திருவாமாத்தூர்ப் பதிகச் சதகம் - ஆறாவது அறுசீர்விருத்த சதகம்"** என்னும் ஓலைச்சுவடி என் சொந்த முயற்சியில் என்றும் இப்பதிவேடு இதற்கு முன்வேறு எந்தப் பட்டயபதிப்பிற்கும் அளிக்கப்பெறவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

பதிப்பாளர்,

ப.கோமளா

**(ப.கோமளா)**

நாள் :
இடம்: சென்னை -5.

“திருவாமாத்தூர் பதிகச்சதகம் — ஆறாவது அறுசீர் விருத்தசதகம் என்னும் இந்நூலினை என் தந்தை **இல. பன்னீர் செல்வம்** அவர்களுக்கு காணிக்கையாக்குகிறேன்.

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **நன்றியுரை** | **VII** |
| **பதிப்புரை** | **VIII - XII** |
| **நூல்** | **1-50** |
| **பின்னிணைப்பு** | |
| 1. செய்யுள் முதற்குறிப்பு | 51-55 |
| 2. துணை நூற்பட்டியல் | 56 |

# நன்றியுரை

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையில் முதுகலை பயில வாயப்பளித்தும், இதேதுறையில் நடைபெற்றுவரும் சுவடியியல் மற்றும் பதிப்பியல் என்னும் பட்டயக்கல்வி பயில இடமளித்தும் உதவிபுரிந்த தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் வீ. அரசு அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இப்பட்டய கல்விக்காகச் சுவடிகளைப் பயிலச் செய்த தமிழ் இலக்கியத்துறை விரிவுரையாளர் **முனைவர் ய. மணிகண்டன்** அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இச்சுவடி கிடைக்கச் செய்த மடத்திற்கும், சுவடியினைக்கொடுத்த **புலவர் பா. வெ. நாகராஜன்** அவர்களுக்கு நன்றியை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும் நான், படிப்பதற்குக் காரணமான என் **அப்பா, அம்மாவிற்கும், சித்தப்பா, சித்தி** மற்றும் என் குடும்பத்தாருக்கும் என் நன்றியைத் தெரிவிக்க கடமைப் பட்டுள்ளேன்

சுவடியினைத் தெளிவுற படிப்பதற்கு எனக்கு உதவிய நண்பர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலினை அச்சிட்டு புத்தக வடிவமாக ஆக்கிய **"டுடே கிராஃபிக்ஸ்"** நிறுவனத்தார்க்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ப. கோமளா**

# பதிப்புரை

பண்டையத் தமிழியலை அறியும் நோக்கில் பல இலக்கண இலக்கியங்கள் காணப்படுகின்றன. இவ்வாறு தோன்றிய நூற்களைத் சுவடியிலிருந்து பல்லறிஞர்கள் அச்சேற்றினர். அச்சுவடிகள் வீடுகளிலும், மடங்களிலும், இன்று நிறுவனங்களிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பாதுகாக்கப்பட்ட சுவடிகள் பெருமளவிற்கு அச்சுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இதனால் 19-ஆம் நூற்றாண்டில் வலுவான தமிழியல்புலம் உருவானது. இக்காலங்களில் பல புதியவகை இலக்கியங்களும் தோன்றின.

சுவடி பாதுகாப்பதில் பெரும்பங்காற்றியது திருமடங்களாகும். அவ்வகையில் தண்டபாணி சுவாமிகளின் 'திருவாமாத்தூர்ப் பதிகச் சதகம்' என்னும்ஓலைச்சுவடி சிரவை ஆதினத்திலிருந்து பெறப்பட்டது. இதுவரை கையாளப்பெறதா இப்புதிய வகை சிற்றிலக்கியம், திருவாமாத்தூர் தலத்தின் மீது பாடப்பட்டதாகும். இந்நூல் கி.பி. 19ஆம் நூற்றாண்டில் தண்டபாணி சுவாமிகளால் இயற்றப்பட்டதாகும்.

## நூலாசிரியர் குறிப்பு

தண்டபாணி சுவாமிகள் திருநெல்வேலியில் விகாரி ஆண்டு கார்த்திகைத் திங்கள் 16ஆம் நாள் சனிக்கிழமையன்று (22-11-1839) பிறந்தார். பெற்றோர் செந்தில் நாயகம் பிள்ளை, பேச்சுமுத்து அம்மை. இவரின் இயற்பெயர் சங்கரலிங்கம். குழந்தைப் பருவத்திலேயே இறையருள் கிடைக்கப்பெற்று

முருகன் மீது பாடல்களைப் பாடியுள்ளார். வண்ணயாப்பில் பாடும் திறமையினால் 'வண்ணச்சரபம்' என்று பாராட்டப் பெற்றவர்.

திருவண்ணாமலை, புதுவை, பழனி, கழுகமலை, திருவாமாத்தூர் எனப் பல தலங்களுக்குச் சென்று பல்வேறு பாடல்களை இறைவன் மீது பாடியுள்ளார்.

**இவர் பாடிய நூற்கள்**

சகத்திர தீபம், ஆறுபிரபந்தங்கள், அறுவகை இலக்கணம், வண்ணத்தியல்பு, புலவர் புராணம், முத்தமிழ் மாலை, ஸ்ரீமுருகப்பெருமான் பிள்ளைத்தமிழ், தமிழலங்காரம், முசுகுந்த நாடகம், கலம்பகம் திரிவந்தாதி, திருவாமாத்தூர்த் தலப்புராணம், பிள்ளைத்தமிழ்ப் பதிகம், சடகோபர் சதகத்தந்தாதி, குருநாதன் அந்தாதி, விழுப்புரம்-தோத்திரத்திரட்டு, தில்லைப்பாதி நெல்லைப் பாதி, மயிலைக் கலம்பகம், ஔவையார் பதிகம், தண்டபாணி விஜயம், வண்ணத்திரட்டு பிள்ளைக்கவி, ஞாயிறு ஆயிரம், திருமால் ஆயிரம், அரசாட்சி முதலிய நூற்களை இயற்றியுள்ளார்.

**சுவடி அமைப்பு**

திருவாமாத்தூர்ப் பதிகச் சதகம் என்னும் இச்சுவடியில் பத்து சதகங்கள் காணப்படுகிறது. இந்நூல் அவற்றுள் ஆறாவதாக அமைந்துள்ளது. இது 'ஆறாவது அறுசீர் விருத்த' சதகமாகும்.

ஒன்பது சுவடிகளைக் கொண்டுள்ளது. பக்கத்திற்கு பத்து வரிகள். சுவடியின் அளவு 44 x 3.5 செ.மீ. ஆகும்.

இந்நூலின் யாப்பு அறுசீர் விருத்தமாகும். இருபது பாடலுக்கு ஒரு வாய்பாடென ஐந்துவகை, வாய்ப்பாட்டினை கொண்டுள்ளன.

இச்சுவடியின் எழுத்தமைதியாவன, மெய்கள் புள்ளி பெறவில்லை. ரகரத்திற்கும் துணைக்காற்கும் வேற்றுமை காணப்பெறவில்லை. தொடர்ச்சியாக எழுதப்பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும் பாடல் எண் குறிக்கப்பெற்றுள்ளன. சுவடி பக்க எண்ணும் இடப்பெற்றுள்ளன.

இந்நூலின் தொடக்கப்பாடல் 'அஞ்சலஞ்சல்' எனத் தொடங்குகிறது. இறுதிப்பாடல் 'பொருவா விளை யாட்டனந்தம்' என்பதாகும்.

## சதக இலக்கியம்

சதகம் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாகும். சதகம் என்பது வடமொழி சொல்லாகும். சதம் என்றால் நூறு, சதகம் என்பது நூறு பாடல்களைக் கொண்டதாகும். தமிழ் மரபில் மாணிக்கவாசகர் சதக இலக்கியத்திற்கு அடிகோலினார். இருப்பினும் கி.பி. 11ஆம் நூற்றாண்டுகளில் தான் சதக இலக்கியங்கள் வளர்ச்சி பெற்றன. தமிழில் தோன்றிய முதல் சதகநூல் கார்மண்டலச் சதகமாகும்.

சதக இலக்கியத்தின் பெயர் அந்நூற் பாட்டுடைத்தலைவர் பெயரால் அமையும். நூறு பாடல்களும் ஒரே யாப்பில் அமைய ஏதேனும் ஒரு மகுடத்தைக் கொண்டு இறைவனையோ ஏனையோரையோ பாட்டுடைத் தலைவராக அமைத்துப் பாடல்

அமையும்.

சதக இலக்கியம் பொருண்மை அடிப்படையில் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை;

மண்டலச் சதகங்கள்,

நீதிச் சதகங்கள்,

துதிச் சதகங்கள்,

காப்பியச் சதகங்கள்

என்பனவாகும்.

இவற்றில் தண்டபாணி சுவாமிகளின் "திருவாமாத்தூர்ப் பதிகச் சதகம்" துதிச் சதகம் வகையில் அடங்கும் இது இறைபெருமையைக் கூறுவதாகும்.

இவ்வாறு பத்துப்பதிகங்களைக் கொண்டதாலும், சதக அமைப்பினாலும் இந்நூல் 'திருவாமாத்தூர் பதிகச் சதகம்' என்றழைக்கப்படுகிறது.

## தலச்சிறப்பு

விழுப்புரத்திற்கு வடமேற்கு பம்பை என்னும் சிற்றாற்றின் வடகரையிலுள்ள தலம் திருஆமாத்தூர் ஆகும்.

கொம்பின்றி படைக்கப்பெற்ற ஆனினங்கள் கொம்பு வேண்டி நந்திதேவரையும், காமதேனுவையும் வேண்டினர். பின்பு அனைவரும் பம்பையாற்றின் வடகரையிலுள்ள சுயம்புலிங்க வடிவமான இறைவனை வேண்டி கொம்பைப் பெற்றனர். நந்திதேவர் சிவனின் வாகனமாக்கப்பட்டார்.

## நூற்பொருள்

திருவாமாத்தூரிலே எழுந்தருளி உள்ள அழகிய நாதனின் உருவச் சிறப்பினையும், அவனின் சிறப்புகளையும் கூறியுள்ளார். திருவாமாத்தூரின் சிறப்புகளையும், பம்பை ஆற்றையும் அங்கு எழுந்தருளிய இறைவனையும் பலப்பட பாராட்டியுள்ளார்.

கொன்றை மலரும், அரவும், எலும்பும் கழுத்திலே அணிந்தவன். தலையிலே பிறைச்சந்திரனையும், கங்கையினையும் சூடியவன். புலித்தோளினை ஆடையாக உடுத்தியவன் பெண்ணுடலைப் பாதியாகக் கொண்டு விடைமீது வருபவன். முக்கண்களையும், பாதத்தில் வீரக்கழலினையும் பூண்டவன்.

இத்தகைய சிறப்புடைய இறைவனே இவ்வுலக வாழ்க்கை பந்தத்தில் சிக்குண்டு உழலாது என்னை எப்போது காப்பாய்? மழுவினையும் மறியினையும் புனைந்துள்ள இறைவா, நாய், நரி, அனையார் நகைக்காதபடி என்னை ஆண்டுகொள்.

திருமாலுக்கும் நான் முகனுக்கும் நடுவிலே நிற்கின்ற இறைவா! சோற்றினைத் தின்று உடல்வளர்ப்பார்ச் சொல்லும் வசைகளால் துயர்பட்டேன். ஆதலினால் உன் ஆனந்தப் பதம்பெறுதல் பொருட்டு எனக்கு அருள்வாய்.

திருவாமாத்தூர் அழகியநாதனிடம் இந்த உலக பந்தத்தில் கட்டுறாத வண்ணம் காப்பாய் என வேண்டும் விதத்தில் இந்நூல் அமைந்துள்ளது. பெண், காமம், கொலை, மாமிசம், நன்மை தீமை முதலியவற்றை இகழ்ந்து பாடியுள்ளார்.

அளவிலாத் திருவிளையாட்டுடையவனே இப்பூமியில் எனையும் நல்வழியில் செலுத்தி உன் பத மலரில் சற்று இடம் கொடுப்பாய் எனக் கேட்டு, தன்னிலையினை தாழ்த்தி உரைப்பதாக இந்நூல் அமைந்துள்ளது.

# திருவாமாத்தூர்ப் பதிகச் சதகம்

## ஆறாவது அறுசீர் விருத்த சதகம்

அஞ்சலஞ்சல் என்றொருக்கால் மழவிடைமேல்
உமையவளோ டவிர்ந்து நாயேன்
நெஞ்சகத்துத் துயர்முழுதும் நீக்கியரு
ளிடச்சிறிது நினைவாய் கொல்லோ?
குஞ்சரமொன் றுரித்தள்போர்த் தாடவல்லாய்
ஆலடியிற் குரவ னான
எஞ்சலில்சீர் ஆமாத்தூர்க் கோயிலிடை
எந்நாளும் இலங்கு வானே! 1

நாயனையர் அரசாளப் பசுவனையார்
அனைவர்களும் நலியக் கண்டாய்!
தூயதிரு வருட்பான்மைக் கிதுவுமொரு
தகுதியெனச் சொல்ல லாமோ?
ஏயமுழு நீறணியு மெழிற்பவளக்
கிரிபோல்வாய் இமையார் போற்றுந்
தாயகமா மெனத்திருவா மாத்தூர்பொற்
கோயினடுத் தழைக்கின் றோனே! 2

எத்தனையோ பேராசைக் கடல்வளர்த்துள்

ளேன்எனையிவ் விகத்துள் ளாரோர்

பித்தனென விகழ்கின்றார் அதுவுமுனது

அருளாடற் பெருமை யன்றோ?

முத்தநகைக் கவுமாரி மணவாளாச்!

ஆமாத்தூர் முதல்வா! மூர்க்கச்

சித்தமுறு தானவர்க்கும் வரமருளச்

சலியாத தெய்வக் கோவே! 3

காதளவுங் கண்மடவார் மயற்கோட்டி

யாற்பெரிது கலங்கி வாடிப்

போதநிலை தடுமாறித் தவிக்குமெனக்

கருள்வழங்கப் போகா தேயோ?

பாதம்வருந் துறப்பரவை மனைக்கிருக்கால்

போய்மீண்ட பரமா! பைம்பொற்

சீதரன்போற் றியதிருவா மாத்தூர்ப்பொற்

கோயினடுத் திகழ்பி ரானே! 4

செங்கமலக் கண்ணானுந் திசைமுகனுங்
காண்பரிய திருத்தாள் சூட்டிப்
பொங்கமல மெஞ்ஞானப் புணரியிற்றோய்த்
தெனையானிற் புகஜெய் தாதோ?
அங்கமலக் காடனைய மேனியுளா
யென்றானுக் கருள்வீ டீந்தாய்
கொங்கமலர்ப் பொழில்சூழும் ஆமாத்தூர்
நடுத்திகழ்பொற் கோயி லானே! 5

நின்மகனா தியதேவர் பலர்மொழிகேட்
டுவப்புறுநான் நெடுநீர்ப் பாரிற்
கன்மமலக் கசடரெனச் செத்தொழிந்து
போம்படிநீ கைவி டாதே
பன்மறைக்கூட் டமுந்துதிக்கும் பழந்திருவா
மாத்தூரா! பழுதி லாமெய்த்
தன்மமுழு தோர்வடிவாந் தவளவிடைப்
பரியுகைக்குந் தகைமை யானே! 6

ஒருமலத்த இருமலத்த மும்மலத்த
எனத்திகழும் உயிர்க்கூட் டத்துள்
இருமலத்த தென்னுயிர்என் றுணர்த்தியுஞ்சோ
தனைபுரித லியல்பன் பாற்றோ?
கருமலக்கா ருணர்வரிய கருணைநெடுங்
டலுடையாய் கவினா மாத்தூர்
நிருமலனே யினியேனும் எனக்குன்அருட்
டுளியருள நினைகு வாயே. 7

வாசவனும் நான்முகனும் மாயனுமா
தியதேவர் மனத்திற் சற்று
நீசர்பசுக் கொன்றருந்துங் கொடுமைசகி
யாக்கருணை நிகழா தேனோ?
பாசமல மறக்களையும் பரமகுரு
பரனாகிப் பரிந்தாட் கொள்வாய்
ஆசகல்சீ ராமாத்தூ ரழகியநா
யகனே!விண் ணவர்கோ மானே! 8

பைந்நாகத் தினுங்கொடியா ரிறுமாப்புக்
கொண்டுபல பசுக்கொன் றுண்ணும்
இந்நாளி லதுதவிர முயலாது
வீடுகரு தீன னல்லேன்!
செந்நாவாற் றுதித்திடற்கு மிரங்காதுற்
றிடிலுனருட் சீர்குன் றாதோ?
முந்நான்கு நெறியினருந் தொபமாமாத்
தூர்நடுவின் முளைத்துள் ளானே! 9

உன்னாணைப் படியுலகம் முழுதும்நடக்
கின்றதென்கை உண்மை யானால்
மன்னாணை யொன்றுளதோ மாமிசந்தின்
பார்க்குங்கை வழங்க லாரோ?
முன்னாணை யத்தனையு மாற்றியவற்
றன்புடையார் மூரணென் றஞ்சும்
பின்னாணை வகுத்தனையோ பீடுறுமா
மாதைநகர் பேணுங் கோவே! 10

கற்றவர்க ளெல்லோருங் கனவாதத்
தேமுயன்றார் கருணை யின்றி
நற்றவவே டம்புனைந்தா ரனைவரும்பொய்த்
திருத்தியுற்றார் நான்கண் டெய்த்துப்
பெற்றமுயற் காமுயல்வா னொருவனைக்காண்
பதுமரிதாப் பிழைப்பட் டுள்ளேன்
சற்றருளாய் ஆமாதைப் பதிபுரக்கும்
பெருமானே! சளந்தீர்ப் பானே! 11

எண்ணரிய பேராசைக் கிருப்பிடமாம்
என்மனத்தும் இலங்கும் நீதான்
விண்ணவரும் நனிமதிப்ப வருட்டிவலை
யொன்றென்மிசை வீசொண் ணாதோ?
திண்ணனையோர் கண்ணனெனச் செய்தானே!
ஆமாத்தூர்ச் சிவனே; செம்பொற்
கிண்ணமுலைக் கவுமாரிக் கினியோனே
எந்நாளுங் கேடி லானே! 12

வெம்பீனர் குடைநிழற்கீழ் பசுவினந்துன்
புறல்கருதி வெருள்கின் றேனைக்
கெம்பீர உற்சாகத் துடனுலவச்
செய்யிலதோர் கீர்த்தி யன்றோ?
கொம்பீர யிரமுடைய குஞ்சரமொன்
றிவர்வானே! குறிக்கும் அன்பர்
தம்பீடை களைவானே! தனித்திருவா
மாத்தூரிற் றழைக்குந் தேவே! 13

வேம்பிணங்கும் மொழிபேசி விரும்பியிரப்
பார்நடுங்க வெருட்டு வாரைச்
சாம்பிணமென் றிகழ்ந்துனது சரண்டொழும்என்
றெனக்கருட்சீர் தரமாட் டாயோ?
பாம்பிணரென் பாதியன புனைவானே!
ஆமாத்தூர்ப பரனே! பைம்பொற்
காம்பிணங்குந் தோட்கவுரி களிகூர
நடம்புரியுங் கழற்றா ளானே! 14

நன்றினுக்குந் தீதினுக்கும் பொதுவாகித்
　　திகழுமுனை நாடி நம்பிப்
பொன்றிடலிற் கொடிதாய துயரடைந்தேன்
　　இனியேனும் புரந்தாட் கொள்வாய்!
பன்றிபின்போய் விளையாடுங் கதையுரைப்பார்
　　வேட்டபல பயனும் ஈவாய்
கொன்றிரையுண் பார்மருவா மாதைவளம்
　　பதிவளரெண் குணப்பி ரானே! 15

பூரணசந் திரவதன மகளிர்படை
　　யொடுவருவான் பொரும்வெம் போரே
காரணமாத் தவமிழந்து காலன்வசப்
　　படவுமென்னைக் கைவி டாதே
நாரணனும் நான்முகனும் அளப்பரிய
　　கனல்வரையாய் நடுவே நின்றாய்
ஆரணமோ லிடலொழியா வாமாத்தூர்க்
　　கோயினடு வமர்பெம் மானே! 16

செஞ்சதங்கைத் தாட்குமர குருபரன்றான்
சொன்னபடி செய்தி லான்;நான்
மிஞ்சநொந்து னருடுணையென் றெண்ணிவந்தேன்;
எனைநீயும் வெறுத்தி டாதே;
கஞ்சனடுத் தலைகவர்ந்து கையில் வைத்தாய்!
அரவுமிழ்வெங் கடுவு முண்டாய்!
அஞ்சனந்தீட் டியவிழியார் நடமாடும்
ஆமாதை யாண்டு ளானே! 17

ஔவியமொன் றறியேனின் னருணிலையாம்
எனக்கருது மதிற்சோர் வில்லேன்
வெவ்வினைவா தனைதவிர்ந்துன் னடியவர்தம்
மொடுகூட விடவொண் ணாதோ?
நவ்வியொடு மழுவணிந்து நரைவிடைமேல்
பவனிவரும் நம்பா கும்பச்
செவ்விமுலைக் கவுரியொடு திகழ்ந்துதிரு
வாமாத்தூர்ச் சீர்செய் வானே! 18

செக்கருஞ்செந் துவரும்நிக ராம்உன்உரு
ஒருக்காலுஞ் சிந்தை செய்யா
மக்களினுந் தாழ்ந்தடியேன் வருந்துறக்காண்
பதும்உனக்கோர் வண்மை யாமோ?
முக்கணுடைப் பெருமானே! மூவாத
முதல்வோனே! முகிழ்வெண் டிங்கள்
மிக்கவிர்செஞ் சடையோனே! வியனாமாத்
தூர்புரக்கும் வீறுள் ளானே! 19

வேனின்மதன் கணையாலும் வெம்புகொடு
மிடியாலும் வெருளும் என்னைப்
பானிறநீற் றான்முழுகி நின்னடியார்
போற்குலவப் பண்ணல் வீணோ?
சேனிலவு பலவாவி திருமனைஆ
யிரத்தொடொளிர் சீரா மாத்தூர்
வானிலுயர் மாட்சியுற மாத்தக்கொம்
பொடுநாளும் வாழும் மானே! 20

வேறு:

ஆறா றாய தத்துவமும்

அதன்மே னிலையும் அறிந்ததிவெண்

ணீறா டிடுமெய் யடியரிடை

நிலவும் பெருவாழ் வெனக்கருள்வாய்!

பாறா டியமழு விலைச்சூலப்

படையாய்! விடையாய்! பத்திவழி

தே றார் உணர்தற் கரியானே!

திருவா மாத்தூர்ச் சீர்ச்சிவனே! 21

குற்றஞ் சிறியேன் செயினுமதைக்

குணமாம் எனக்கொண் டருள்வாயேல்

முற்றன் புடையா ரிகழ்வாரோ?

முன்நாள் முறைமை அதுவன்றோ?

வெற்றந் தணர்கூண் டினிதுசெயும்

வேள்விக் கொலையும் விழைவான்போற்

சிற்றம் பலத்தும் மிருந்தோனே!

சீராய் ஆமாத் தூரானே! 22

இந்நாள் வரைநின் அருட்பெருஞ்சீர்
        எய்திக் களித்தோர் எவரேனுஞ்
செந்நா கரிக வேள்வியல் என்
        தின்னா நலமேன் தெரித்திலரோ
கைந்நா கத்தோற் போர்வையுடைக்
        கருணா கர்க்கற் பக்கதனியார்
எந்நா ளையினு மாமாத்தூர்
        எழிற்கோ யிலில்வாழ் எம்மானே. 23

எல்லாச் சுகமுந் துக்கமும்நின்
        இயற்பே ரருட்கூத் தென்றுணர்ந்தும்
பொல்லாம் நல்லா ரெனக்கருதிப்
        புழுங்கிக் களிப்பேற் புரிவாயோ
கல்லா லடியிற் றிதழ்குரவா!
        கவினா மாத்தூர்க் காவலவா
வல்லாம் முலைப்பார்ப் பதியுடனோர்
        மடிமால் விடைமேல் வருவானே! 24

பணியே புரியார் பலருவகைப்
        பாங்குற் றிடலும் பற்பமுழு
தணிவார் முதலோர் துயர்மிகப்பட்
        டழுந்து மாறு மறிகில்லேன்
மணிமே கலையார் பலராடு
        மாதைப் பதியின் பெருவாழ்வாய்த்
தணியா விரத்த தினர்மலர்க்குந்
        தகும்பே றுதவச் சலியானே 25

பற்றோர் அணுவும் இல்லார்தம்
        படிவங் காட்டிப் பார்முழுதும்
பெற்றோர் தாமுங் கொளமாட்டாப்
        பேரா சையினாற் பிழைப்பட்டேன்;
சற்றோ கருணைத் துளியுதவித்
        தமியேன் றனைநீ தாங்குவையோ?
கற்றோர் பரவும் ஆமாத்தூர்க்
        கடவுள் அரசாம் காரணனே! 26

ஈனச் சமயத் தினர்சிலரும்
　　இறுமாப் பெய்தும் படிச்செயும்நீ
மானச் சைவ நெறிபுகுமென்
　　வருத்தந் தீராக் கவலையன்றோ
கானச் சதுமா மறைமுழுங்குங்
　　கவினா மாத்தூர்க் கண்வளரு
ஞானச் சிவனே அனைவருக்கும்
　　நடுவா நிகழும் நாயகனே! 27

செந்தா மரையான் செயுமுடலில்
　　தியங்குஞ் சிறியேன் தேவர்கொளாச்
சிந்தா குலங்கொண் டிளைத்திடவுஞ்
　　செய்தா யிதுமோர் திருக்கூத்தோ?
நந்தார் செவியா டிடஆடும்
　　நடநா யகனே! நரைவிடைமேற்
பந்தார் முலையா ளுடன்மாதைப்
　　பதிசூழ்ந் துவக்கும் பழையோனே! 28

வானத் திமையார் பெருவாழ்வும்
　　வறிதென் றுணரும் மதியளித்தும்
பானற் கருங்கண் ணியர்மோகப்
　　பரவை சுவறப் பார்த்திலையே!
கூனற் சிலையா மெனக்கனகக்
　　குன்றை வளைத்தாய்! கோடுமுனாள்
ஆனத் தனையும் பெறும்மாதை
　　அழகா! முழுநீ றணிவானே! 29

கண்ணப் பன்றன் வாய்சுவைத்த
　　காரே னத்தூன் சுவையினுமென்
வண்ணப் பனுவற் சுவையிழிந்தாய்
　　வாணி முதலோர் வருந்தாரோ?
பண்ணப் பழமா மறைதுதிக்கும்
　　பரமா! பலபல் கணத்தோரும்
எண்ணப் பம்பா நதிசூழும்
　　எழின்மா தையில்வா ழிறையோனே! 30

முந்தும் பிறவி களிற்றமியேன்

முத்தி யடைந்த மொழிபொய்யாய்ப்

பிந்தும் பிறப்பீ தெனக்கமைந்த

பெருமை யுலகிற் பிறங்காதோ?

செந்து முழுவதும் பெறும்பார்நீர்

தீசால் வெளியென் றிவையுதிக்கும்

ஐந்து முகத்தோர் பரம்பொருளாய்

ஆமா தையில்வா ழறவோனே! 31

செஞ்சொற் புலவோ ரினும்பலராற்

சிறிது மறியா திகழ்வாரேல்

வெஞ்சொற் கயவர் முழுதிகழல்

வியப்போ விரைந்தாண் டருள்புரிவாய்;

தஞ்சொற் புரப்பபார்க் கெளியானே!

சளத்தொ டுநிட கள்மானா

அஞ்சொற் கிளிநேர் உமையவளோடு

ஆமாத் தூரில் அமர்வானே. 32

என்போர் மகளா யதுமுதலாம்
மியற்பே ராட லியம்பிலிகழ்,
வன்போர்க் கெமனா மெனத்திகழோர்
வண்மைப் புலவன் வாரானோ?
முன்போர் விழைந்தார் புரம்மூன்றும்
முகிழ்வெண் ணகையாற் பொடிசெய்தாய்!
அன்போர்ந் தருள்வாய் ஆமாத்தூர்
ஆண்ட பெருமா னாம்அரனே 33

முன்னம் வடலூ ரனைப்பெரிதும்
மோசஞ் செய்தாய் முறைகேட்கும்
என்னை யிகழ்வான் போன்றிருந்தாய்;
இனியா ருனைப்போற் றிசைப்பவரோ?
பொன்னங் கடுக்கைத் தொடைமார்பிற்
பொறிவா ளரவும் புனைவாய்! வெள்
அன்னம் பயிலும் வயன்மாதை
அதிபா அமரர்க் கரியானே. 34

முழுது மெனைநிற் களித்திருந்தும்

மூவர் வினையான் மூதுலகில்

அழுது வருந்தச் செயலேனோ?

வருட்பாங் கினுக்கீ தழகேயோ?

கழுது வளைய நடுவாடல்

கழறு வார்க்குங் கருணைசெய்வாய்!

பழுது மருவா ஆமாத்தூர்

பாலித் தருளும் பரம்பரனே! 35

செங்கட் டிருமால் உலகளிக்கும்

சீர்குன் றியதாற் றியங்குமெனை

அங்கட் பவள நெடுங்கிரிபோன்

அடன்மால் விடையில் விரைந்தாள்வாய்;

வெங்கட் தகுவர் தமக்கும்அவர்

விரும்பும் வரமீந் தருள்விகிர்தா!

திங்கட் சடில திகர்கரன்போல்

திருவா மாத்தூர் சேர்சிவனே! 36

கன்னன் பொருவு கொடையாளர்

கலிவா தனையாற் கலக்கமுற

அன்னந் தாயினும் பகிர்ந்தருந்தார்

ஆவல் மூறக் காண்பவனார்

நன்னம் பயில்பேய்ப் பலசூழ

நடுவே நடிப்பாய் நம்புமவர்

கின்னங் களையும் பெருங்கருணைக்

கிழவா மாதைக் கிர்ச்சுரனே. 36

ஓட்டார் பெருவாழ் வதுசகியாது

உள்ளங் கலங்கி யுழலுமெனை

நட்டா தரியா திகழ்வாயேன்

ஞால முயுமா றொன்றுளதோ?

எட்டாம் வகைநன் குணர்வர்முள்

ஏக மயமா யிலங்கிறைவா!

கொட்டார்ப் பொழியா மாதைநகர்க்

கோயி னடுவாழ் குணக்குன்றே! 38

கொக்கின் இறகுங் கோளரவும்
கோல மருப்பா மையின்றோடுந்
திக்கி லெவருஞ் சொலப்புனைந்தாய்
சிறியேன் பகர்சொற் றீயனேவோ?
இக்கின் மலர்வைத் தையுங்கொடியோன்
எரிய விழித்தாய் எழிற்கரத்தில்
லக்கி னியுந்தாங் கியமுதல்வா!
ஆமாத் தூர்விட் டகவானே! 39

என்றன் அறிவின் நிலைகலங்கி
இருள்வா தனைப்பட் டிடறீர்வான்
உன்றன் அருளே துணையெனக் கொண்டு
டுள்ளே னொடுவா துயக்கொள்வாய்
மன்றன் மதியம் புனைசடைமேன்
மத்த மவரும் வனைந்துள்ளாய்!
தென்ற லுலவும் பொழின்மாதைத்
தெருக்கள் தோறுந் திகழ்வானே. 40

காரணம் எனமுக் கால்நின்
கட்சுதன் கழறன் மெய்யேல்
நாரணன் அனையு சீர்த்தி
நானிகத் தடைவே னன்றோ?
பாரணங் கிணைந்தே ராக்கிப்
பங்கயன் உகைப்ப ஊர்ந்தாய்
வாரணம் பிளிறு மோசை
மலியுமா மாத்தூ ரானே! 41

என்னுணீ யியக்கி வாழ்தல்
இணையில்நூல் லியம்பக் கேட்கும்
பின்னுமென் றன்மேற் குற்றம்
பேசுமா றகின் றில்லேன்!
மின்னுறழ் சடிலக் காட்டில்
விதுவுடன் அரவும் பூண்டாய்!
மன்னுசீ ராமாத் தூரில்
மலையென வளர்ந்துள் ளானே! 42

குற்றமே செயவுந் சாகங்

கொள்ளும்என் கொடிய நெஞ்சம்

நற்றவம் உணர்ந்த வாறே

நடத்தியுய்ந் திடச்செய் தாள்வாய்

புற்றரா வினமும் பூண்டாய்!

புரங்களோர் மூன்றுஞ் செற்றாய்!

கற்றவர் புகழா மாத்தூர்க்

காவல்செய் கருணை யானே! 43

காமமாங் குற்ற மொன்றாற்

கடுந்தவத் தினுக்காம் முண்மை

நேமமுற் றிழந்தேற் பண்டை

நெறிச்செவத் திருத்தொண் ணாதோ?

தாமரைப் பனவன் சென்னி

தனிளரந் தயின்றாய்! சந்தப்

பாமழை யினர்சூழ் மாதைப்

பதிபுரந் தருள்பி ரானே! 44

பாற்பசுத் திரளுங் கொல்லும்
பதிதர்மேற் சினஞ்செய் யாரா
மேற்பயன் பெற்றோர் பற்பல்
வெற்பினந் தொறுமுள் ளாரோ?
சூற்படு முகிலே போலுஞ்
சுரிகுழல் அமரும் பாகா!
மேற்படை முருகற் கீந்தாய்!
வியன்புகழ் மாதை வேந்தே! 45

ஆனினத் துரிமை யெய்தார்
அடைந்தமெய் யருட்சீ ரிந்த
நானிலத் தீனர் செய்யும்
நவையினுங் கொடிதென் றோர்ந்த
யானினிப் பெறும்பே றென்னோ?
இமையவ ரியாக்கை வெந்த
பானிறப் பொடிபோர்த் துள்ளாய்!
பழுதிலா மாதை யானே! 46

புல்லருந் துயிர்கள் தம்மைப்
புனிதஆ லயங்க ளுகு
கொல்லலு மிசை கின்றார்தங்
குலமுழு கழிவ தென்றோ?
அல்லமர் கண்டத் தப்பா!
அணிகொளா மாதை யாளும்
வல்லவா இமவான் ஈன்ற
மயிலனாள் வலம்வாழ் வானே! 47

கஞ்சமா மலர்ப்புத் தேளுங்
கார்கடல் அனைய மாலுந்
தஞ்சமென் நிறைஞ்சு நின்சீர்
தமியனேன் சாற்றற் பாற்றோ
வெஞ்சமர்த் தகுவர் மாய
மேதினித் தேர்மேற் சென்றாய்!
நஞ்சியின் றிறவாய் மாதை
நகர்பெருங் கோயி லானே! 48

மூவகைக் கழகத் தோரும்

முன்னைநா ளிருந்த தாய

தூவருட் பலகை யின்னுந்

துலங்குமா றியற்று வாயோ?

தேவரும் அசுரர் தாமும்

தினந்தொழப் பொதுவா நின்றாய்!

பாவமுற் றொழிக்கும் மாதைப்

பதிப்பெரும் பம்பை யானே! 49

அற்பநூற் புலமை யோரும்

அறங்கொல்வேற் றரசர் தாமும்

பற்பழூழ் கொருவன் தன்னாந்

பாழ்படுந் தினமொன் றின்றோ?

கற்பனை முழுதுந் தீர்ந்துங்

கண்ணுதற் கனல்வெற் பன்ன

பொற்பமைந் துள்ளாய் மாதைப்

பூம்பதி புரக்குங் கோவே. 50

அக்கர முழுத நின்பேர்

அருள்வசத் தினவே யென்னத்

தக்கமெய்ம் முறைபொய் யாமற்

றமியனேன் றனையாட் கொள்வாய்

செக்கரும் பவளக் குன்றுந்

தீயுமா தவனும் போலு

மிக்கசீர் மேனி யப்பா

மேதகு மாதை யானே! 51

காமநோ யுதவு நோய்கள்

கணக்கில்பற் பலவென் றோர்ந்துங்

கோமள மடவார் கொங்கைக்

குடங்கரு தெனைக்கைக் கொள்வாய்;

பூமரு விருமின் னாரும்

போற்றுமெய்ப் புகழ்சான் மாதைச்

சாமகா னப்பே ராசைச்

சங்கரா! தலையன் னானே! 52

இனியசொல் லிருக்க வன்சொல்
எரியெனப் பகர்கின் றார்பால்
தனியிரந் துழலா வண்ணந்
தண்ணருட் டுளியொன் றீவாய்!
பனிமலர்க் கடுக்கை யோடு
பச்சறு கணிய நாணாய்!
மனிதரைத் தேவர் போற்றும்
மாதைமா நகர்வாழ் வானே! 53

மானநா வலர்பல் லோர்முன்
வழுத்தியும் மடமை சாலும்
ஈனனோன் றுதிவேட் கின்றாய்
இதன்பய னறிகின் றில்லேன்
தேனநா விதழி பூத்த
செஞ்சடைப் பவளக் குன்றே!
ஆன்அவாம் மாதைக் கோயில்
ஆண்டநா யகப்பி ரானே! 54

என்னுணின் னருட்டாக் கின்றி

யானுனைக் குறித்துப் பாடல்

பன்னுவ துண்டே லுன்றன்

பரத்துவம் பழுதாங் கண்டாய்!

பொன்னுரு மலையும் வெள்ளிப்

பொரும்பும்வைத் திருந்தும் பொல்லாங்கு

உன்னுபாம் பாதி பூண்டாய்!

உயர்புகழ் மாதை யோனே. 55

சீரருள் விளக்கஞ் சற்றே

திகழ்ந்துமுட் டௌிவில் லார்போற்

பாரறி நிந்தை கோடி

படைத்துளேன் பாந்தாட் கொள்வாய்

சேரனை யாரூ ரானைச்

சேண்வழிக் கயிலை சேர்த்தாய்!

மாரனைப் பொடித்து மீந்தாய்!

மாதைமா நகர்க்கோ மானே! 56

மனதுணர்ந் துள்ள வுண்மை
        மாநிலத் தவிரா வாற்றால்
எனதுயிர் படும்பா டோர்ந்தும்
        இரங்கிடா திரும்ப தேனோ?
தனதனார் உறவன் என்னச்
        சாற்றுநர் தமையுங் காக்குங்
கனதயை யுடையாய் மாதைக்
        காவல்செய் கடவு ளானே! 57

கற்பக நிழற்பால் வைகுங்
        கடவுளர் கலங்கத் தாக்கும்
மற்படு தகுவர் கூற்றாம்
        வண்மையும் விழைந்தேன் கண்டாய்
சிற்பநூ லுடையார் வெள்குந்
        திருப்பணிச் சீரா மாத்தூர்
நிற்பவா! அகில கோடி
        நிறுவிய நீதி யானே! 58

எட்சனென் றிமையார் கண்முன்
இலங்கியோர் துரும்பை நாட்டும்
பட்சநன் குணர்ந்துற் றாரும்
பரத்துவப் பிழைசொல் வாரோ?
அட்சமோர் மூன்று தோயும்
ஆனன மைந்துள் ளாய்வன்
புட்சர பழுமா மெந்தாய்
புகழ்மலி மாதை யானே. 59

சஞ்சலப் பிணியால் வாடித்
தயங்குறுந் தமிய னேன்முன்
அஞ்சலென் றொருக்கால் தோன்றி
ஆண்டுகொண் டருள்செய் யாயோ?
செஞ்சடைக் கிழவா! விண்ணூர்த்
தேவர்தம் எலும்பும் பூண்டாய்
மஞ்சடர் பொழில்சூழ் மாதை
மாநகர் வயின்வாய்ந் தோனே! 60

சோறுமிகத் தின்றுடலம் வளர்க்கின்றார்
சொல்லும்வசை யாற்பெரிது துயர்ப்பட்டேன்
ஈறுதவிர் ஆனந்தப் பதம்பெறுதற்
கேற்றதொரு பாயமினி திசைத்தருள்வாய்
நூறுமலர்க் கொன்றையணி சடையானே
நாரணற்கும் நான்முகற்கும் நடுநின்றாய்
ஆறுவகைச் சமயத்தோர் களும்போற்றும்
ஆமாதைக் கோயிலிடை யுமர்வானே! 61

அன்னமுத லாயவண வருந்தாமே
ஆயிரஞ்சின் நாட்கழிக்கும் அடியேனை
இன்னமும்பல் சோதனைகள் செயலாமோ
இரக்கப்பண் பினைமட்டும் எங்குவைத்தாய்
பொன்னசல மாயசிலைக் கரத்தானே
பூதகண நாதர்தொழப் பொதுவில்நின்றாய்
பன்னகமும் மண்டையுடன் என்புமணிவாய்
பம்பைதிகழ் மாதைவளம் பதிச்சிவனே. 62

தாமரைப்பண் ணவன்றன்கைப் பொறியாலும்
சண்டாள மன்மதன்கைக் கணையாலும்
ஏமன்விடும் தூதர்களுக் காளாகாது
என்னைஇனி தாண்டுகொள்ள வெண்ணுவையோ?
கோமளமுத் தாம்பிகைப்பெண் மணவாளா
குஞ்சரமு கத்தணைக்கு கனையீன்றாய்
தீமகஞ்செய் வாற்கறுவும் முதல்வீரா
திருவளர்மா தைநடுத்தி கழிவானே! 63

செங்கரும்புக் கையனுக்கும் ஏமனுக்கும்
செத்தபின்பும் வாழ்ந்துவக்குஞ் சீர்செயும்நீ
எங்கள்தவம் முற்றுறக்கண் பதனாலே
இவ்வுலகம் இன்புறச்செய் திடலரிதோ
சங்கரச தாசிவம காதேவா
சகளமுநிட் காளமுந்தா னாகுவாய்
கொங்கவிழ்மென் மலர்ப்பொழில்சூழ் மாதைநகர்க்
கோயிலிடை நாடோறுங் குளிர்வானே. 64

கொக்கினது வெற்றிறகும் புனைந்தவிர்சீர்
கூறும்என்னை அன்பினிற்கைக் கொள்ளாதே
சுக்கிரன்றன் சீடர்கொள் ளும்ஆணவத்தால்
துன்பமுறக் கண்டிருக்கை தோமன்றோ?
அக்கினியும் உடுக்கையுங் கையிலேந்தி
ஆடல்பகர் வார்க்கருளும் அழகேசா?
முக்கியத்த லங்களிலொன் நாயமாதை
முதற்பரனே எவருக்கும் முன்னவனே. 65

செங்கமலக் கண்முகுந்தன் முதலோரும்
செகமுய்தற் கானவகை சிந்தியாராய்த்
தங்கள்தங்கள் காரியத்தின் முயன்றிருந்தார்
தமியேனவ் வகையெண்ணித் தயங்குகின்றேன்
இங்கவெண்ண மெனர்களித் திடலாரோ
யாவையும்நின் னருட்செயலென் கைவீணோ
மங்கலங்கள் அத்தனையும் மிகவோங்கும்
மாதைநகர்க் கோயிலுக்குள் வாழ்பிரானே. 66

பெரும்பத்த ராகும்அவர் சவையூடே
　　பேரின்ப மெய்தமுயல் பெருமையுற்றும்
விரும்பத்த காதனவும் விரும்பிநொந்தேன்
　　வீணேயி றந்தொழிய விட்டுவிடேல்
கரும்பத்த வேளைவென்ற கனற்கண்ணா
　　கங்கையொடு திங்களுறை கவின்சடையாய்
திரும்பத்த காதபதந் தருவானே
　　சீரார்ந்த மாதைநகர்ச் சிவசித்தனே. 67

செக்கருந்தீப் பிழம்புஞ்செந் துவர்க்குன்றுஞ்
　　சிந்தூர மும்புரைநின் றிருமேனி
மிக்கவிடை மீதிலுமை யவளோடும்
　　வேலனொடும் என்கண்எதிர் விளங்காதோ
தக்கனது வேள்வியழித் ததிற்சேர்ந்தார்
　　தாம்முழுதும் பொடிப்படத் தகர்த்தோனே
திக்கடங்கத் துதிசெயு தையூரில்திருக்
　　கோயில்கொண் டிமருந்தெய் வக்கோவே! 68

சங்கரா சத்தியுடை யுருத்திரன் நீ
    தான்எனச்சொல் வார்க்கும்அருள் தரலுளதேல்
எங்காரெங் நுனங்கருதி னுமாங்கே
    இலங்கவல்லா யெனனக்தி ரங்காயோ?
பொங்கார்வச் சுந்தரன்தள் நிமித்தமன்றோர்
    பூவைமனைக் கிருவிசைபோய் மீண்டவா
கொங்கார்மென் மலர்ப்பொழில் சூழுமாதைக்
    கோயிலிடை நாடொறுங் குலாவுவானே! 69

பொன்பழுதின் றியமெய்ப்பொ ருளென்று
    போதபர ஞானமிகழ் பூரியர்தம்
இன்பமும் வேட்டுழலுந் தமியேனை
    ஏற்றுக்கொள் ளவுஞ்சிறி தெண்ணுவையோ
மின்படுசெஞ் சடிலக்கா டதன்மேல்
    விதுவுட னரவணி வதியனே
யன்பர்ம ருவுதிரு வாமாத்தூர்
    ஆண்டபெரு மானெனநின் றவிர்வானே. 70

நாகரிக மிக்கபுல வோர்களைல்லாம்

நலங்குலைந் தீடழிய நானிலத்தில்

சூகரத்தி னூனுமுண்கின் றார்கொடுங்கோல்

துலங்கவைத் தாயிதென்று தொலையும்கொலோ

சாகரத்தி னாலமுண்டும் மாயானே

சருவதந் திரமுடைச் சங்கரனே

சேகரத்திற் கொக்கிறகும் புனைவானே

திருமிகு மாதைநகர்த் தேசிகனே. 71

எச்செயலு நின்செயலென் றெளிதுணரந்தே

ஏத்தெடுக்கு மென்னைவம்பி லின்னல் செய்கின்றாய்

பொய்ச்செயலுள் ளார்கள்பெ ரிதிகழாதே

போதபர மானந்தப் புணரிதந்தாள்

மெய்ச்செயலெல் லாமுடைய பெருமானே

வேதமுட னாகமங்கள் விள்ளும்விகர்தா;

இச்செயலொன் றென்னதென்னக் காட்டவும்வல்லாய்

ஈடில்புகழ் மாதைநகர்க் கிறையவனே. 72

முன்பாட னால்வர்முத லோர்பலரும்
மொழிந்தனர்கொண் டுகொண்டுமூ தருட்செய்தாய்
என்பாட லத்தனைகொண் டணிந்ததன்றி
யின்னமுங்கொள் கின்றனைசற் றிரங்கிலையே!
தென்பாடல் வடமொழி தெலுங்காதிச்
சில்கலைப்பா டல்களுஞ்சேர்த் தணிகுவாய்
பொன்பாட லம்செருந்தி கொன்றைகோங்கு
பொலிபொழின் மாதைநகர்ப் புங்கவனே. 73

ஆதவனுஞ் சந்திரனு மக்கினியுமே
அம்பகங்க ளாமடிக ளன்றிமற்றோர்
நாதனுள னென்றுரைக்கும் அவர்க்குமஞ்சி
நலியவிட்டாய் மெலிந்தொர்நா யிலலைந்தேன்
ஏதமற்ற பேறெனக்கிங் கென்றருள்செய்வாய்
என்னிசையும் வசையுநிற்கே உறுங்கண்டாய்
நாதசத்தி வாழிடத்த நாதிமுத்தனா
நன்மாதைப் பதிவளர் நாயகனே. 74

பாரதனி லுள்ளபல கன்மதன்மம்
பாழாதற் கண்டுமிகப் பதைபதைக்கும்
பேரறிஞர்க் கருள்செய்யச் சோம்புகின்றதோர்
பித்தொழிந்தெந் நாளின்முன்னைப் பெற்றியெய்துவாய்
நாரணற்கும் நான்முகற்கும் அறிவரியாய்
நாதாந்தத் தோ்வரிய நாடகஞ்செய்வாய்
சீரணங்கு போற்றிஉயும் மாதையிடத்தோர்
செம்பவளக் குன்றிலவிர் செவ்வியானே. 75

நாரணனை யன்னமன்னர் ஆண்டபாரை
நாயுணவு தின்னமவர் ஆள்வதான
சீரழிவு தீர்க்குந்திரு வுள்ளமுனக்குச்
சிறிதேனு மில்லையெனிற் செப்பியருள்வாய்
போரவுணர் தாமும்வர்க் கிடமாய
புரங்களும் நீறவொரு புன்னகைசெய்தாய்
மாரனைச்சுட் டொழித்தபின் னளித்தாண்டாய்
மாதைநகர்க் கோயிலுக்குள் வைகுவானே. 76

புல்லருந்து கின்றவற்றைக் கொன்றுதின்னும்
பூரியர்தம் வேரறுக்கப் போதமுயன்றேன்
வல்லமுத்தி யொன்றுநக்கிற் போதுமென்றெண்ணும்
மடமையில்லே ஏனனிடம்வம் புகள்செய்யேல்
அல்லல்அ ருளாள்வாருக் கில்லையென்றான்
அறிந்துசொல்நா டகஞ்செய்தா யெனல்பொய்யோ
பல்லவமும் பச்சறுக மிட்டாரக்கும்
பயின்றருமா தைவளம்ப தியரனே. 77

மாயனுந்தி மலர்வரு பிரமாவே
மகத்திற்கொன் றுண்ணுய்விதி வகுத்தானென்று
ஏயவுணர் வார்பலர்முன் வெறும்வீடே
ஏற்றமெனப் பகர்ந்திடற்கியா னிசைகிலேன்
தூயதிரு நீறுமுழு தணிவானே
தொண்டர்தொகை சொன்னவற்கொர் தூதுமானாய்
காயகமில் லார்பரவு மாதைநகர்க்
கண்ணுறைகு வாயனந்தங் கண்ணுளானே. 78

எறும்பின்வயிற் றிலுறுநுண் புழுவும்நின்
எட்டுவகை மூர்த்தியியொன் றென்றுதெளியா
வெறும்புலவோர் சிலரும்வீடு பெற்றதா
விள்ளுமுல கன்னையெநுன் விளம்புங்கொலோ?
குறும்புடைத் தானவர்க்கும் வேணவாமுன்
கொடுத்தபெருங் கருணைக்குன் றமனையாய்
செறும்பகைவோ் களையும்வீ ரா்பலபோ்
தெண்டனிட மாதைநடுத் திகழ்சிவனே. 79

சீவகரு ணைப்பெருக்கஞ் செய்யுமாறே
சிந்தித்துன் றுதிசெய்த வடலூரான்
பாவரிக முழ்படிநின் மறைந்ததெண்ணிப்
பரதவிப்பேன் றனையும்பாழ் செய்வாயோ
நாவல்நீழற் றீவறியச் குலபுலவோர்
நவின்றசொற் படிமுற்று நடத்தியவா;
தேவர்தொ ருமாதைநகர்க் கோயினடுவோர்
சிவலிங்கத் துள்ளுறையுந் தேசுளானே. 80

நோயும் கனல்போல் மிடியும்
 நூறு விதத்தில் வருத்த
நாயும் நரியும் அனையார்
 நகைப்ப நலியா தெனையாள்?
காயும் கொலைவாள் மழுவும்
 கவினார் மறியும் புனைவாய்
ஆயும் சதுமா மறைச்சீர்
 ஆமா தையில்வாழ் அரணே. 81

எல்லா வினையுங் களைந்தாண்டு
 இனிய பயனீற் தருள
வல்லா யெனநின் நன்பால்
 வந்தே னென்னை வருத்தேல்
அல்லார் களத்தோ ரழகா!
 ஆரூ ரனையா தரித்துப்
பல்லா யிரம்பொன் னளித்தாய்
 பழமா தையில்வாழ் பரனே. 82

கீழ்மை யுடையார் பலரால்
　　　　கேடு பகுமிவ் வுலகந்
தாழ்மை சிறிதும் மருவாத்
　　　　தவந்தோய் தரக்காட் ருவையோ?
ஏழ்மை முகிலூர் பவர்தம்
　　　　எலும்பு முழுதும் புனைவாய்!
வீழ்மைந் தருளும் மிளிர்வாய்
　　　　வியன்மா தையின்மே யவனே! 83

விண்ணோர் குடிகோர் கூற்றா
　　　　விளங்கும் அவுணர் பலரை
மண்ணோர் சிலர்முன் வென்ற
　　　　வகைமெய்ப் படுமா றருள்வாய்
தண்ணோங் கியநீர்ச் சடையில்
　　　　தவள மதியும் புனைவாய்
பெண்ணோர் பாக முடையாய்!
　　　　பெருஞ்சீர் மாதைப் பிரானே. 84

பிச்சை யமுதுண் டுவப்போர்
        பிறவிக் கடலிற் புகுந்தோர்
அச்சை யெடுக்கா ரெனுஞ்சொல்
        லதைநம் பிலதால் அயர்ந்தேன்
கொச்சை நகர்ச்சேய்க் கருள்சீர்
        கொடுக்கச் சிறிதெண் ணுவையோ
கச்சை விடைக்கே தனத்தாய்
        கவின்மா தையின்நா யகனே! 85

நண்பா லுதவா நின்சீர்
        நவில நானா ணிலதும்
வெண்பாட் டென்பாற் கொளநீ
        வெட்கா ததுவும் வியனே;
பண்பா டினர்க்கன் றுதவும்
        பழங்கீர்ந் தியெலாம் பழுதோ?
திண்பார் புகழு மாதைத்
        திருக்கோ யிலில்வாழ் சிவனே. 86

தென்றற் கிரியோன் முதலோர்

சிந்தை யறியத் திகழும்

என்றற் கருள்செய் கிலையேல்

இளப்ப முனைத்தோய் தருங்காண்

மன்றற் சடிலத் தலைமேன்

மதியம் புனைவா னவனே

குன்றற் கருஞ்சீர் மாதைக்

கோயி னடுவாழ் குருவே! 87

மழையைச் சுடுந்தீக் கொடுங்கோன்

மன்னர்க் கெமனாம் வாழ்க்கை

விழைகின் றவர்ச்செய் துளநீ

வென்றி யவர்க்கே னருளாய்

உழையை மழுவோ டணிகோள்

உடையாய் விடையொன் றுகைப்பாய்

தழையும் புகழா மாத்தூர்

தனில்வாழ் சிவசங் கரனே. 88

தண்டா மரையோன் புதல்வர்

தம்மிற் தலைவன் றமிழ்சார்

வண்டா ரணியும் நீசர்

வசமர்க் கினைநின் வாழ்க்கை

வெண்டா தசலந் தனையும்

வெம்பேய் கொளவீந் துளையோ?

செண்டா யுதன்சூழ் காவல்

சீரா மாத்தூர்த் தேவே. 89

தீராக் காதற் கொடும்பேத்ய்

சிறியேற் செயுஞ்சீ ரழிவால்

வாராக் கேடுற் றிடைந்தேன்

மகிழ்கூ ரவுஞ்செய் குவையோ

நேரார்க் கெமனே போலும்

நெடியோர் பலர்போற் றிறைவா

சீரா மாத்தூர்ச் சிவனே

தெருணீர் முதற்றே சிகனே! 90

எண்ணில் பசுக்க ணாளும்
மீனர்வ தைப்பச் சாமிம்
மண்ணில் அவற்றிற் கிரங்கா
மாத வரும்வாழ்ந் துளரோ
கண்ணில் லவர்நேர் சிலரும்
கருணை பெறமுன் கொடுத்தாய்
விண்ணில் நடிப்பாய்! மாதை
விமலத் தனிவே தியனே. 91

நாடெங் கணும்வாழ் வதுவே
நலமென் றிசைத்தாண் மொழியே
மீடென் றுணரா ரிழைக்கும்
பிழைமுற் றறுநா ளுளதோ
ஓடென் றுயனார் பலர்தம்
முடைமண் டைகள்கொண் டிரந்தாய்!
வீடென் றெழிலா மாத்தூர்
விளங்கச் செயும்வித் தகனே. 92

அற்ற மறிந்தா ருயிர்கட்கு
ஆர்வஞ் செயுமா றயர்வேன்
குற்றம் பொறுத்தால் அருட்கோர்
குறைவா மெனவஞ் சுதியோ?
கற்றங் குணர்ந்தார் நால்வர்
கல்லா லடியிற் கண்டு
கொற்றம் பெறநல் கியவா!
குளிரா மாத்தூர்க் கோவே! 93

கோலா கலமங் கையர்தங்
கொங்கைக் குடமே குளித்து
மாலா மெனக்குன் னருட்சீர்
வாய்க்கப் பெறுநா ளுளதோ
சேலார் புனற்றண் வயல்சூழ்
திருவா மாத்தூர்த் தெருவிற்
பாலார் மொழியா ளோடும்
பவனி வரும்பண் ணவனே. 94

சொற்சீ ரறி புலவோர்

சூழு மவையிற் சூழலாது

எற்சீ தானா தியரும்

இசைக்கும் படியாள் குவையோ

நற்சீ டர்கள் நால்வர்

ஞானம் அறிய நவின்றாய்

பொற்சீர் மிகுமா மாத்தூர்ப்

புரியிற் பொலிபூ ரணனே. 95

தருமங் கசந்து பாவந்

தான்மிக் கினித்திட் டாற்போல்

அருமருந் தவுல கழிக்கும்

அசட்டுத் தொழிலென் றொழிவாய்

கருமங் கடந்த பத்திக்

கடலிற் குளிப்பார்க் கெளியாய்

திருமின் பரவும் மாதைச்

சிவதே சிகசிற் பரனே. 96

நீயே நானென் றெண்ணும்

நெறியும் ஒருவா றுணர்ந்தும்

நாயே யெனச்சீ ரழிந்து

நலியச் செயலேன் நவில்லாய்

சேயே முரண்வா லிபனே

திரைமே னியனே யென்னப்

போயேற் றன்செய் திடுவாய்

புகழ்மா தையிலற் புதனே. 97

மென்னை யவைதா மறிதற்

கேற்ற விதஞ்செய் திடுவாய்

பொன்னை விழைந்தார் சிலர்வாய்

புகல்செந் தமிழும் புனைந்தாய்

தென்னை வனஞ்சூழ் மாதைத்

திகிரிச் சிலைச்சே வகனோர்

ஒன்றினை மற்றொன் றுணரு

வக்கும் படிநீ நற்றுஞ் 98

உயிரொன் நினைமற் றொன்றுண்

டுவக்கும் படிநீ உஞற்றுஞ்

செயிர்நுன் றியகூத் தொன்றுஞ்

சிறிதும் அழகின் றியதே

வயிரம் புனைவார் தம்மை

மதியார் மனம்போன் மாதைக்கு

அயிர்வண் புகழா யிரஞ்சூட்டு

அழகா அமரா திபனே! 99

பொருவா விளையாட் டனந்தம்

புரிவா யெனினும் புவியில்

வருவார் சிலரை வானோர்

வணங்கச் செயன்மாட் சிறிதே

ஒருவா வுருவா வருவா

உளவா விலவா வுலவாத்

திருவா மாத்தூர்க் கரசாத்

தெய்வம் பலசெய் வானே! 100

**முற்றிற்று - தெய்வமே துணை**

## முதற்குறிப்பு:
**எண்: பாடல் எண்**


### அ

அக்கர முழுது 51

அஞ்சலஞ்சல் என்றொருக்கால் 1

அற்ற மறிந்தா 93

அற்பநூற் புலமை 50

அன்னமுத லாயவுண 62

### ஆ

ஆதவனுஞ் சந்திரனு 74

ஆறா றாய 21

ஆனினத் துரிமை 46

### இ

இந்நாள் வரைநின் 23

இனியசொல் லிருக்க 53

### ஈ

ஈனச் சமயத் 26

### உ

உயிரொன் றினைமற் 99

உன்னாணைப் படியுலகம் 10

### எ

எச்செயலு நின்செயலென் 72

எட்சனென் றிமையார் 59

எண்ணரிய பேராசைக் 12

எண்ணில் பசுக்க 91

எத்தனையோ பேராசைக் 3

எல்லாச் சுகமுந் 24

என்றன் அறிவின் 40

என்போர் மகளா 33

என்னுணீ யியக்கி 42

என்னுணின் னருட்டாக் 55

எறும்பின்வயிற் றியலுநுண் 79

**ஒ**

ஒட்டார் பெருவாழ்வு 38

ஒருமலத்த இருமலத்த 7

**ஔ**

ஔவியமொன் றறியேனின் 18

**க**

கஞ்சமா பலர்ப்புத் 48

கண்ணப் பன்றன் 29

கற்பக நிழற்பால் 58

கற்றவர்க ளெல்லோருங் 11

கன்னன் பொருவு 37

**கா**

காதளவுங் கண்மடவார் 4

காமநோ யுதவு 52

காமமாங் குற்ற 44

காரணம் எனமுக் 41

**கீ**

கீழ்மை யுடையார் 83

**கு**

குற்றஞ் சிறியேன் 22

குற்றமே செயவுநீ 43

**கொ**

கொக்கின் இறகுங் 39

கொக்கினது வெற்றிறகும் 65

**கோ**

கோலா கலமங் 94

**ச**

சங்கரா முத்தியுடை 69

சஞ்சலப் பிணியால் 60

**சீ**

சீவகரு ணைப்பெருக்கஞ் 80

சீரருள் விளக்கஞ் 56

**செ**

செக்கருந்தீப் பிழம்புஞ்செய் 68

செக்கருஞ்செந் துவரும்நீ 19

செங்கரும்புக் கையனுக்கும் 64

செங்கமலக் கண்முகுந்தன் 66

செங்கட் டிருமால் 36

செங்கமலக் கண்ணானுந் 5

செஞ்சதங்கைத் தாட்குமர 17

செஞ்சொற் புலவோ 32

செந்தா மரையான் 27

**சொ**

சொற்சீ ரறியாப் 95

**சோ**

சோறுமிகத் தின்றுடலம் 61

**த**

தண்டா மரையோன் 89

தருமங் கசந்து 96

**தா**

தாமரைப் பண் 63

**தீ**

தீராக் காதற் 90

**தெ**

தென்றற் கிரியோன் 87

**ந**

நண்பா லுதவா 86

நன்றினுக்குந் தீதினுக்கும் 15

**நா**

நாகரிக மிக்கபுல 71

நாடெங் கணும்வாழ் 92

நாயனையர் அரசாளப் 2

நாரணனை யன்னமன்னர் 76

**நி**

நின்மகனா தியதேவர் 6

**நீ**

நீயே நானென் 97

**நோ**

நோயும் கனல்போல் 81

**ப**

பணியே புரியார் 25

பற்றோர் அணுவும் 26

**பா**

பாரதனி லுள்ளபல 75

பாற்பசுத் திரளுங் 45

**பி**

பிச்சை யமுதுண் 85

**பு**

புல்லருந் துயர்கள் 47

புல்லருந்து கின்றவற்றைக் 77

**பூ**

பூரணசந் திரவதன 16

## பெ

பெரும்பத்த ராகும்அவர் 67

## பொ

பொன்பழுதின் றிய மெய்ப்பொ 70

பொருவா விளையாட் 100

## பை

பைந்நாகத் தினுங்கொடியா 9

## ம

மழையைச் சுடுந்தீக் 88

மனதுணர்ந் துள்ள 57

## மா

மாயனுந்தி மலர்வரு 78

மானநா வலர்பல் 54

## மு

முந்தும் பிறவி 31

முன்னம் வடலூ 33

முன்பாட னால்வர்முத 73

முழுது மெனைநிற் 35

## மூ

மூவகைக் கழகத் 49

## மெ

மென்னை யவைதா 98

## வா

வாசவனும் நான்முகனும் 8

வானத் திமையோர் 28

## வி

விண்ணோர் குடிக்கோர் 84

## வெ

வெம்பீனர் குடைநிழற்கீழ் 13

## வே

வேம்பிணங்கும் மொழிபேசி 14

வேனின்மதன் கணையாலும் 20

# துணைநூற்பட்டியல்


1. விண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் வரலாறு தவத்திரு. தி.செ. முருகதாச சுவாமிகள் (இரண்டாம் பதிப்பு) சிரவைக் கௌமார சபைவெளியீடு, சிரவணபுரம், 1998,

2. தமிழில் சதக இலக்கியம் டாக்டர் ச. சிவகாமி, உலகத் தமிழ்க்கல்வி இயக்கம், பெருங்குடி, சென்னை, 1985

3. தமிழில் தலபுராணங்கள் - இரண்டாம் பகுதி, வே.இரா. மாதவன், பாவை வெளியீட்டகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1995.

